REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 117

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி மீ 12உ புதன் (28—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி மீ 13உ வியாழன் (29—10—53)

தி. மு. கழகம் நெசவாளருக்குச் செய்த சேவையின் மகத்தான வெற்றி

கைத்தறி ஆடைகளையே அணிய தமிழர்கள் பெற்றுள்ள மனமாற்றம்

மில் வேட்டி, சேலைகளை பம்பாயிலிருந்து வரவழைக்க வியாபாரிகளிடையே அச்சம்

கோட்பாடு வெல்லுகிறது! கோணல் மதியினர் திருந்தட்டும்!

நமது உழைப்பை ஆச்சாரியாரின் புகழ் அணியாக ஆக்கப்படுகிறது!

புதுடில்லி, அக். 26—

வேஷ்டி, சேலை ஆகியவைகளின் உற்பத்தியை கைத்தறியாளர்களுக்கே ஒதுக்கிவிட வேண்டுமென்ற தனது கோரிக்கையை, மத்திய அரசாங்கம் சாதகமாகக் கவனித்து வருவதாக, சேலத்தில் நேற்றைய தினம் முதன் மந்திரி ஆச்சாரியார் கூறியதை ஒட்டி, இங்கு, சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கத்தின் கொள்கையில் மாறுதலெதுவும் இல்லாவிட்டாலும், சென்னை கைத்தறியாளர்கள் எல்லோரும், வேஷ்டி, சேலை ஆகியவைகளின் உற்பத்தியை 'ஏகபோக உரிமையாக அனுபவித்து வருகின்றனர்' எனக் கருதப்படுவதாக அறியப்படுகிறது.

(1951-ம் வருடத்திய மதிப்புப்படி) 5000 பேல்கள் மில் சேலைகளும், வேஷ்டிகளும் பெற்றுக் கொண்டிருந்த சென்னை, இப்போது சென்ற சில மாதங்களில் 800 பேல்களே பெற்று வருகிறது. வேஷ்டிகளும், சேலைகளும் சென்னைக்கு, பெரும்பாலும் ஆமதாபாத் பம்பாய் ஆகிய இடங்களிலிருந்துதான் போகின்றன. சென்னைக்குச் செல்லும் மில் துணிகளின் அளவில் இன்னும் சரிவு ஏற்படலாமாதலால், மேலே குறிப்பிட்ட 800 பேல்கள் என்பதைக்கூட நிரந்தரமானதாகக்கொள்ள முடியாது.

சென்னை மாநிலத்திலுள்ள மில்கள் சேலை, வேஷ்டிகள் உற்பத்திச் செய்வதில்லையாதலால், சென்னை கைத்தறியாளர்களெல்லாம், வேஷ்டி, சேலை ஆகியவைகளின் உற்பத்தியில் ஏகபோக உரிமை பெற்றிருப்பதாகவே உண்மையில் மதிக்கப்பட வேண்டும்.

மத்திய அரசைப் பொறுத்தவரையில், கட்டுப்பாடுகள் ஏதேக்கப் பட்டுவிட்டமையினால், மில் துணிகள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றோர் மாநிலத்திற்குச் செல்வதைத் தடுக்க முடியாதென அது கருதுவதாகத் தெரிகிறது. அதன்படி, வற்புறுத்தலின் மூலம்தான் சென்னைக்கு வரும் மில்துணிகளைக் குறைக்க முடியும். சமீபத்திய மாதங்களில் ஏற்பட்டுள்ள சரிவைக் காணும்போது, மில் துணி விற்பனையாளர்கள் அந்த வற்புறுத்தலுக்கு (வேண்டுகோளுக்கு) செவி சாய்த்துள்ளார்கள் என்றுதான் கூற வேண்டும்.

சென்னையைப் பொறுத்த வரையில், இப்பொழுதைய நிலை, கைத்தறித் தொழில் திருப்திகரமாகவே இருப்பதாக—கட்டுப்பாடு எடுக்கப்பட்டுவிட்டால் — கருதப்பட வேண்டும் எனச் சொல்லப்படுகிறது.

மத்திய அரசாங்கமோ அல்லது மாநில அரசாங்கமோ— அரசியல் சட்டத்தை மீறுமலோ—அல்லது இப்பொழுது நினைக்கப்படாத, ஒரு மத்திய கட்டுப்பாடு சட்டத்தை புதுப்பிக்காமலோ— மில் துணிகள் நடமாட்டத்தைத் தடுக்க முடியாதெனத் தெரிகிறது.

அனுமதி வழங்குவதில் கண்டிப்பாக இருத்தல், விசேஷ விற்பனை வரி போன்றவைகளினால் சென்னை அரசாங்கம் மில் துணிகளின் வரவைக் கட்டுப்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் அவையெல்லாம் அரசியல் சட்டத்திற்கு ஊறுதல் செய்பவை என்பது விவாதத்திற்குரிய விஷயம்.

—'மெயில்' [தனி நிருபர்]
27—10—53

வீண் செயல்!

★

"சமுதாயத்தைச் சீராக்க உழைக்கும் பேராண்மை கொண்டோரை பிற்போக்கு சக்திகள் எதிர்ப்பது, கடல் அலையை நோக்கிக் கட்டளையிடும் கருத்தழிந்தவன் கதை போன்ற வீண் செயல் தான்."

—அண்ணதுரை

மதுரைக்கு நேரு வந்ததின் எதிரொலி

தி. மு. கழகத் தோழர்கள்மீது போலீஸ் வழக்கு விசாரணை

மதுரை, அக். 27—

நேற்று காலை மதுரை முதல் வகுப்பு நீதிபதி தங்கமணி நாடார் முன்பு ஏற்கனவே வாய்தா போடப்பட்டிருந்தபடி, தி. மு. கழகத் தோழர்கள் 29 பேரும் ஆஜராயினர்.

போலீசார் மொத்தம் 31 பேர் மீது வழக்கு தொடர்ந்துள்ளனர். மற்ற இரண்டு பேரையும், போலீசார், தாங்களே ஆஜர் செய்வதாக நீதிபதியிடம் தெரிவித்தனர்.

மீண்டும் 3-11-53ல் வாய்தா போடப்பட்டுள்ளது.

தி. மு. கழகத் தோழர்களின் சார்பாக அட்வகேட் டி. தர்மராஜ் சந்தோஷம், எம். ஏ. பி. எல்., அவர்களும், வழக்கறிஞர் சொக்கலிங்கம் அவர்களும் ஆஜராயினர்.

வழக்கு விசாரணை இன்னும் ஆரம்பமாகவில்லை.

வழக்கின் நிலையைக் காண பொதுமக்களும், தோழர்களும் பெருங் கூட்டமாக திரண்டு வந்திருந்தனர்.

தோழர் கோவிந்தன், மற்றும் 7 தோழர்கள் மீதுள்ள மற்றொரு வழக்கு அடிஷனல் முதல் வகுப்பு நீதிமன்றத்தில் 29—10—53-ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குக்கு வழக்கறிஞர் கு. ஆறுமுகம் பி.ஏ., பி. எல், அவர்கள் ஆஜராவார்கள்.

தாம் திருதிராஷ்டிரனாக இல்லாததற்கு ஆச்சாரியாரின் கவலை!

இரண்டு பிள்ளைகளை கிராமத் தொண்டுக்கு அனுப்பினாலே போதும்!

அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்டதும் ஆச்சாரியாரின் அடுத்தப் புகலிடம்?

ஆத்தூர், அக். 26 —

இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் பேசும்போது, "சிலர், ஊக்கம் கெடும்படி உணர்ச்சியோடு பேசி, மக்கள் மனதை மாற்ற முயல்வர். அறிவு வந்தால், கர்வம் வந்துவிடுகிறது. தமிழ்ப் பண்டிதர்கள் நல்ல பேச்சாளிகள்; அவர்கள் கடவுளே இல்லை யென்று பிரச்சாரம் செய்து வருகின்றனர். மேல் நாட்டில் சிறந்த அறிஞர்கள் இருக்கின்றனர்; அவர்கள் ஆண்டவன் விஷயத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. எப்படிக் குடும்பத்திற்கு ஒரு தகப்பன் இருக்கிறாரோ, அப்படித்தான் கடவுள் உலகிற்கு.

"ஒரே கட்சி இருக்கக்கூடாதென்கின்றனர். மாறுவது நல்லதுதான்; அடிக்கடி மாறுவதில் கெடுதல் ஏற்படும். வருவதும், போவதுமாக இருந்தால் இறுதியில் எல்லாம் ஒன்றுகிவிடும்."

"எல்லோரும் பொதுக் கட்சியாகிய காங்கிரசில் சேருங்கள்; அதுதான் ஆண்டவன் கட்சி."

"ஆண்டவன் வேண்டும்—கத்தி வேண்டாம் என்கிறோம். சிலர், எதற்கும் எதிர்தான் கூறுகிறார்கள்."

"உங்கள் ஒழுக்கம, உங்கள் ஆசிரியர்கள் கையில் இருக்கிறது ஆசிரியர்கள்தான் வழிகாட்டிகள். நீங்கள் கெட்டால் ஆசிரியர்கள்தான் பொறுப்பு."

"தாய்மார்கள், குழந்தைகளை, ஆசிரியர்களை நம்பித்தான் அனுப்புகிறார்கள். உங்களுக்கு குறும்பு செய்வதில் பிரியம். குறும்பை, பள்ளியில் செய்யாதீர்கள்; பாடசாலை இல்லாதபோது செய்யலாம். உங்களுக்கு, அதற்கும் அவகாசம் கொடுத்திருக்கிறேன். (அரைநாள் பள்ளி) சிலர் இது பற்றி குறைகூறுகிறார்கள். நீங்கள் நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நல்லவர்களாகுங்கள்"

"ஏழைகளின் வாழ்க்கையை உயர்த்துவதற்காக எல்லோரும் கிராம சேவை செய்ய வேண்டும். எனக்கு 100 புதல்வர்கள் இருந்தால், அவர்களை கிராம சேவைக்கென்றே விட்டுவிடுவேன்," என்றார்.

ஆச்சாரியாரின் அர்த்தநாரித்தனம்!

"எனக்கு ஒரே பயம்தான்; காங்கிரஸ்காரர்களும் துவேஷத்தைப் பின் பற்றினால் என்னவாவது? உப்புகளே உப்புப்போட வேண்டி ஏற்பட்டால், எப்படி மற்றவைக்கு உப்பு போடுவது? விரோதிகளைப்பற்றிப் பேசி என்ன பயன், காங்கிரஸ்காரர்களுக்கே ஒழுக்கம் கெட்டுவிட்டால? சந்நியாசியே கெட்டுவிட்டால் எப்படி சரியாகாதோ, அவ்விதமே, காங்கிரஸ் காரர் ஒழுக்கம் குறையக்கூடாது. துவேஷம் கூடாது. சிலர் துவேஷத்தைப் பரப்புவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர்."

"காங்கிரஸ், மகத்தான ஆலமரம் போன்று, தேசம் பூராவும் உள்ள கட்சி. எல்லா ஜாதியினரும் சேர்ந்து ஏற்படுத்தினார்கள் காங்கிரசில், சராசரி போக்கியதையைக் காப்பாற்ற வேண்டும். தொத்து நோய் போல்,மற்ற கட்சி துவேஷ முறையை அதில் உட்புக விடக்கூடாது. பிரிவினைக்கு இடமளிக்கக் கூடாது."

—சேலத்தில் ஆச்சாரியார், [illegible] 23—10—53.

என். எஸ். இளங்கோ

அதிராம்பட்டினம், அக். 26—

தோழர் என். எஸ். இளங்கோ உடல் நலம் குன்றி, வைத்திய உதவி பெற்றுக்கொண்டுள்ளார். இன்னும் இரண்டு வாரங்களுக்கு எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள [illegible]

ஐவர் சிறையில்!
இன்று
58-வது நாள்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 28—10—1953 புதன்

குழப்பத்திற்குமேல் குழப்பம்!

வயிற்றின் இயல்பு உணவுப் பசி. மூளையின் இயல்பு கல்விப் பசி. இரண்டுக்கும் தொடர்புண்டு. ஆனால், இரண்டையும் ஒன்றாக்கிக் குளறி வழிவது அரசியல் சூதாட்டம்.

இந்த வாரம், கல்வி வாரம் என்று சொல்லப்படுகிறது ஆச்சாரியார் முதல், சாதாரண ஆரம்ப ஆசிரியர் ஈறாகப் பள்ளிக்கூடங்களில் கல்வி பெறுவதுபற்றிப் பேசித் தீர்க்கிறார்கள். தெளிவான யோசனை இல்லை. சிக்கல் தீர்க்க அறிவுடைய பரிகாரம் கூறப்படவில்லை. குழப்பத்தைக் கூட்டுகிறார்கள். பிரச்னை அப்படியே சீரழிந்து கிடக்கிறது.

பிரதமர் ஆச்சாரியார் சொல்லுகிறார்: 'சிறு பிள்ளைகள் விஷமம் செய்யக்கூடாது; ஒரு வேளை கல்வி முறையைப் புகுத்தி இருக்கிறேன்; ஒரு வேளை படியுங்கள்; ஒரு வேளை 'விஷமம்' செய்யுங்கள்; ஆசிரியர்களிடம் மதிப்புக் காட்டுங்கள்,' என்று.

நிதி அமைச்சர் கூறுகிறார்: "ஆச்சாரியாரின் கல்வி திட்டம் அருமையானது. வயிற்றையும், மூளையையும் ஒன்றாக இணைக்கும் அருமையான ஏற்பாடு. பிள்ளைகள் ஆசிரியர்களிடத்தில் 'குரு பக்தி' காட்ட வேண்டும். அது இல்லாததினால்தான், இந்த அவலநிலை. ஆசிரியர்கள் பசியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்களிடத்தில் பணம் கிடையவே கிடையாது," என்று.

இதுவுமல்லாமல், "துவக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பில் சேர்க்கப்படும் எட்டு சிறுவர்களில் மூன்றே மூன்று சிறுவர்கள்தான் நான்காவது வகுப்பு வரையில் படிக்கிறார்கள். எனவே, ஐந்து சிறுவர்களின் கல்விக்காக செலவழிக்கப் பணம் வெறும் பாழ்தான்" என்று பேசி இருக்கிறார்.

இந்தப் பேச்சு உண்மை இல்லை என்று நாம் எடுத்துக் காட்டினால்கூட, நம்மை வகுப்புத் துவேஷி என்றுகூறி, கண்களை உருட்டி மிரட்டிக் காட்ட, களபதிகளை ஏவினாலும் ஏவுவார்கள் அமைச்சர்கள்! அமைச்சர் எடுத்துக்காட்டும் கதை, வெறும் பழங்கதை. இப்பொழுது இந்த நிலை பெரிய அளவில் மாறி இருக்கிறது. முதல வகுப்பில் சேர்ந்த சிறுவர்களில் சரிபாதி பேருக்குமேல் ஐந்தாம் வகுப்புவரையில் படித்துப் பயிற்சி பெற்றுத்தான் வருகிறார்கள். பொதுவாக எல்லாப் பெற்றோர்களிடமும், குறிப்பாக கிராமப் பெற்றோர்களிடமும், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்ற எண்ணம், எப்போதோ ஏற்பட்டு வளர்ந்துகொண்டுதான் வருகிறது. இப்பொழுது அது தீவிரமாகியும் இருக்கிறது.

இதை விளக்க நாம் புள்ளி விவரத்துக்கு அலையத் தேவையில்லை. சிறுவர்களின் தொடக்கக் கல்விக்காக சர்க்கார் செலவழித்துவரும் தொகை, ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டுவருவதே போதிய எடுத்துக்காட்டாகும். இதுடன், பள்ளியிலாத சிற்றூர்களில் எல்லாம், பள்ளிக்கூடம் வேண்டும் என்ற எழுச்சிக் குரல் அடுத்தடுத்துக் கிளப்பப்படுவதையும் கருத்துள் கொள்ளவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் எண்ணிக்கையும் கூடி வருகிறது. பள்ளியில் பயிலும் சிறுவர்களின் தொகையும் கூடி வருகிறது. இந்த உண்மை மறைக்க முடியாதது.

கல்வி மந்திரி சொல்லும் குறைபாடு, ஆரம்பக் கல்வித் துறையில் இன்றும் உள்ளதாகவே கொண்டால், அதாவது முதல் வகுப்பில் சேரும் 8 சிறுவர்களில் நான்காவது வரையில் 3 சிறுவர்கள்தான் படிக்கிறார்கள். மற்ற 5 பேர் இடையிலேயே படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். எனவே, இதற்காகச் செலவிடும் தொகை வீணாகிறது என்ற அமைச்சரின் அறிவிப்பை அப்பழுக்கற்ற 'சத்திய வாக்கு' என்றே வைத்துக் கொண்டால், இடையிலே பள்ளிப் படிப்பை நிறுத்திவிடும் 5 சிறுவர்கள் கல்வி பெறுவதற்காக, அமைச்சர்கள் கண்டுள்ள ஏற்பாடு என்ன என்ற கேள்வி நியாயமாகவே அனைவருக்கும் எழும். இதுவுமல்லாமல், உருப்படாத கல்வித் துறைக்கு சர்க்கார் பணம் பாழாகிறது என்று தெரிந்திருந்தும், மேலும் மேலும் மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்கி வருகிறார்கள் என்ற கேள்வியும் பிறகுதான் பிறக்கும்.

கல்வியின் மதிப்புத் தெரியாது இருந்த ஒரு காலத்தில், நமது ஆரம்பப் பள்ளிகளின் நிலை, அமைச்சர் கூறுவதுபோல் தான் இருந்தது என்பது உண்மை. இப்போது அந்த நிலை புரட்சிகரமாகி மாறியிருக்கிறது என்பதும், அதினிலும் உண்மையாகும். இந்த உண்மை அமைச்சருக்கும் நன்கு தெரியும்.

உண்மை தெரிந்திருந்தும், அமைச்சர் இப்படிக் கூறுவதற்குத் தகுந்த காரணம் இல்லாமலும் இல்லை. ஆரம்ப ஆசிரியர்களின் வயிற்றில் அடிக்கவே, அவர்களின் அவசியமான தேவைகளை அலட்சியப்படுத்தவே அமைச்சர் இந்தக் குண்டை தூக்கிப் போட்டு இருக்கிறார்.

விளக்கமாகக் கூறவேண்டுமானால், "நீங்கள் சொல்லிக் கொடுக்கிற படிப்பின் லட்சணம் இதுதான். உங்களிடத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளில் 8-க்கு 5 பேர் படிப்பை இடையிலேயே நிறுத்தி விடுவதற்குக் காரணமே, உங்களுக்குப் போதிய திறமை இல்லாதது தான். உங்களுக்குள்ள ஆற்றல் இன்மைக்கு இந்தச் சம்பளம் போதும்" என்பது தான். அமைச்சரின் பேச்சுக்குப் பொருள் கொள்ள வேண்டும். இதைத் தவிர, வேறு பொருள் கொள்வதற்குத் துளியும் இடம் கிடையாது.

1935—அப்போது அதிகாரத்தில் இருந்த நீதிக்கட்சி, தொடக்கக் கல்வியைக் கட்டாய மாக்கியது. அப்போது இருந்த கல்வி இலாகா தலைமை அலுவலரின் ஒத்துழைப்புடன் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தை உருவாக்கி அமுல் நடத்தியது. அந்தத் திட்டப்படி ஆரம்பக் கல்வியின் கால முடிவுவரையில், பள்ளியில் சேர்க்கப்படும் பிள்ளைகள் பயின்று வருமாறு பார்த்துக்கொள்ளும் கட்டாயம் பெற்றோர்களிடம் புகுத்தப்பட்டிருந்தது. அத்துடன், பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் 25 சதவிகிதத்துக்குக் குறையாமல் நான்காவது ஐந்தாவது வகுப்பில் சிறுவர்களின் எண்ணிக்கை இருந்தால் தான், அந்தப் பள்ளிக்கு சர்க்கார் மானியம் என்ற ஏற்பாடும் இருந்தது. ஆனால், இந்த ஏற்பாட்டை 1945-ல் இருந்த காங்கிரஸ் சர்க்கார் தொலைத்துத் தலை முழுகிவிட்டது. இதிலுள்ள காங்கிரஸ் அரசியல் சூதாட்டம் என்னவோ, யார் கண்டார்கள்?

இப்பொழுதும், கிராமப் புறங்களில் வயதுவந்த பிள்ளைகள் அனைவரையும் ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் சேர்க்காமல் இருப்பதற்குள்ள காரணமே, அப்பெற்றோர்களுக்குள்ள வறுமையும் ஏழ்மையுமே முக்கியமாகும். அவர்களுடைய வாழ்வுக்கு வழி செய்வதைத்தான் முதற்கண் அமைச்சர்கள் செய்ய முனையவேண்டும்.

இப்பொழுது படித்துவருகிற சிறுவர்களில் பெரும்பாலோருக்கு பகல் ஒரு வேளைக்காவது இனும் சோறு கொடுத்தால்தான், சிறுவர்களும் இடையிலேயே படிப்பை நிறுத்தி விடாமல் தொடர்ந்து படித்துவர முடியும். இந்த ஏற்பாட்டின் பயனாக, படிப்பு எதற்கு என்று முடிவு கட்டிக் கொண்டிருக்கிற பெற்றோர்கள்கூட, தங்களுடைய குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க முந்துவர்.

ஆனால், அமைச்சர்கள் இந்த நல்ல ஏற்பாட்டைச் செய்ய முன்வரமாட்டார்கள் என்பது அவதைக் காட்டிலும், இதை கனவிலும்கூட கருத மாட்டார்கள் என்பதே பொருத்தமுடையதாகும்.

குழந்தைகளினுடைய எதிர்கால கல்வியைக் குட்டிச் சுவராக்கப் புதிய கல்வித் திட்டம் என்ற பெயரால், 'சமுதாயத் துறியாமை' திட்டம் தீட்டியுள்ளவர்களிடமா, நாம், நன்மையை எதிர்பார்ப்பது? 'புத்தி, புத்தி' என்று கன்னத்தில் போட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

தமிழ் இலக்கியங்கள் உலக ஒளி காணுமல் மறைக்கப்பட்டன

பாரிஸ் நகரில் பாதுகாப்பாக தமிழ் ஏட்டுச்சுவடிகளும் உள்ளன

பிரெஞ்சு துரைமகனுர் தோழர் மெயில் அவர்களின் தமிழ்ப் பற்று

"பிரெஞ்சு, தமிழ் வித்வான் ஒருவர் பாண்டிச்சேரியில் இருந்தார். சென்ற நூற்றுண்டிலிருந்த அவர்தான் முதன் முதலில் தமிழ் இலக்கிய உலகில் ஆராய்ச்சியிலீடுபட்டவர். 18-லிருந்து 20 மணி நேரம் நாளொன்றுக்கு வேலை செய்யும் அவர், ஆரியரென்றழைக்கப் பட்டார். அதன் விளைவாக அவர் நோயால் பீடிக்கப்பட்டார். அவர் தான் முதன் முதலில் தமிழ்ப் புத்தகங்களைப் பெரும் அளவுக்கு வாங்க ஆரம்பித்தவர். அப்புத்தகங்கள் எல்லாம் இன்னும் 'பாரிஸ்' நூல் நிலையத்தில் உள்ளன."

"தமிழ் கையெழுத்துப் பிரதிகளான, ஏட்டுச் சுவடிகளும் எங்களிடமுள்ளன. அவைகள் எங்கட்கு உண்மையில் ஆச்சரியத்தைத் தருகின்றன. அந்த ஏட்டுச் சுவடிகள் மிகவும் கவலையோடு பாதுகாக்கப்படுகின்றன. அந்தச் சுவடிகள் வைக்கப்பட்டுள்ள வீடுகள் 'பாதுகாக்கப்பட்ட காற்றோட்ட'முடையவை. அந்த வீடுகளின் கால நிலையை அறிவிக்கும் கருவி ஒன்றும் உள்ளது."

"நான், பாரிஸில், இந்தி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் கற்றுத்தருகிறேன். ஆனால், எனக்கு தமிழ் மட்டும்தான் கற்றுத்தர வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது ஏனெனில், ஆரம்ப நூற்றுண்டுகளில் அளவிடற்கரிய சிறந்த தமிழ்ப் புலவர்கள் இருந்திருக்கின்றனர்."

"தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக மட்டுமின்றி, தமிழ் இனத்தின் விலை மதிக்க முடியா இலக்கியங்களை உலகத்தில் முன் வைப்பதற்கு ஏதாவது செய்யப்பட முடியுமென நம்புகிறேன்."

அதைத் தொகுப்பவர், "நீங்கள், ஆங்கிலம், கிரேக்கம் ஆகிய மொழிகளுக்குரிய அளவு இடம் எடுத்துக் கொள்ளலாம்," என்று குறிப்பிட்டார். அது நடைமுறையில் ஒரு புதிய வழி.

—இவ்வாறு, பாரிஸ் நகரில் இந்திய மொழிப் பேராசிரியராக இருந்து வரும் தோழர் மெயில் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

பெங்களூர், நகரப் பேராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, மாணவர் தமிழ் இலக்கிய மன்றத்தில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் டி. ஏ. ஜெயசந், பி. ஏ., எல். டி., தலைமை வகித்தார். அதுசமயம், பாரிஸ் நகர இந்திய மொழிப் பேராசிரியராக இருந்து வரும் தோழர் மெயில் என்ற தமிழ் மொழி அறிஞர், தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி விளக்கிக் கூறினார். அவரை துவக்கத்தில் இன்மொழி கூறி, பள்ளியின் தமிழ் ஆசிரியர் புலவர் க. சுப்ரமணியம் அவர்கள் வரவேற்றார்.

தோழர் மெயில் பேசியதின் சாரமாவது :—

"முதற்கண், நான், இனிய தமிழ் மொழியைப் பற்றி எனது கருத்தைத் தரப் பிரியப்படுகிறேன். சிறிது நேரம் தமிழில் பேசியபின், தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசுகிறேன். உங்கள் மத்தியில் நான் இருப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சி தருகிறது. பாரிஸ் நகரத்தில், நான் அநேக ஆண்டுகளாக, தமிழ் இலக்கியங்களையும் காவியங்களையும் பயின்று வருகிறேன். அங்கு தமிழ் கற்றுத் தரவும் செய்கிறேன். எனக்கு முன்னால் இரண்டு பேராசிரியர்கள் இருந்தனர். ஜூலியன் வில்சன் என்ற பெயர். நன்கு இங்கு தெரிந்திருக்கலாம். அவர் இப்போது 72 வயதிற்கும் அதிகமான முதியவர். ஆனால் இந்த இரண்டு பேர்களுக்கு முன்னால் பிரஞ்சு, தமிழ் வித்வான் ஒருவர் பாண்டிச்சேரியில் இருந்தார். சென்ற நூற்றுண்டிலிருந்த அவர்தான் முதன் முதலில் தமிழ் இலக்கிய உலகில் ஆராய்ச்சியிலீடுபட்டவர். 18-லிருந்து 20-மணி நேரம் நாளொன்றுக்கு வேலை செய்யும் அவர், ஆரியரென்றழைக்கப்பட்டார். அதன் விளைவாக அவர் நோயால் பீடிக்கப்பட்டார். அவர்தான் முதன் முதலில் தமிழ்ப் புத்தகங்களைப் பெரும் அளவுக்கு வாங்க ஆரம்பித்தவர். அப்புத்தகங்கள் எல்லாம் இன்னும் 'பாரிஸ்' நூல் நிலையத்தில் உள்ளன. இவையல்லாது, அங்கு இன்னும், காவியம், விஞ்ஞானம், சொற்பொழிவு என்ற பல்வேறு அறைகளிலும் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. நான் தற்பொழுது புதிய தமிழ்ப் புத்தகங்கள் வாங்குவதற்காக வந்துள்ளேன். அவைகளை சென்னையில் வாங்கலாமென்றிருக்கிறேன்.

தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளான, ஏட்டுச் சுவடிகளும் எங்களிடமுள்ளன. அவைகள் எங்கட்கு உண்மையில் ஆச்சரியத்தைத் தருகின்றன. அந்த ஏட்டுச் சுவடிகள் மிகவும் கவலையோடு பாதுகாக்கப்படுகின்றன. அந்தச் சுவடிகள் வைக்கப்பட்டுள்ள வீடுகள் "பாதுகாக்கப்பட்ட காற்றோட்ட"முடையவை. அந்த வீடுகளின் காலநிலையை அறிவிக்கும் கருவி ஒன்றும் உள்ளது.

நான், கிழக்கத்திய மொழிகள் கற்றுத் தரும் ஒரு தனிப்பட்ட பள்ளியில் கற்றுத் தருகிறேன். இந்தப் பள்ளியில், தூரக் கிழக்கு, அடுத்தகிழக்கு, கிழக்கு ஐரோப்பா ஆகியவற்றைச் சேர்ந்த நாற்பது மொழிகள் கற்றுத் தரப்படுகின்றன. இச்

(3-ம் பக்கம் பார்க்க)

'என்னை மதித்ததற்காகவே என் சொல்லையும் ஏற்காதீர்'

— (:) —

'ஆய்ந்து பார்த்தே என் சொல்லுக்கு உடன்படுங்கள்'

துணைத் தலைவர் சர். ராதாகிருஷ்ணன் குறிக்கோள்

தார்வார், அக். 26—

"நான் சொல்லுபவைகளை ஆராய்ந்த பிறகு, அவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்; என்மீதுள்ள மதிப்பிற்காக மட்டும் அவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டாம்."

என்று, புத்தர் கூறியுள்ளதை நினைவுபடுத்தி, கர்நாடக பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுக் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:—

உரிமை வேட்கை

"எண்ணச் சுதந்திரம் நிலவும் பொழுதுதான் மனித சுதந்திரம் பத்திரமாக இருக்கும். பல்கலைக் கழகங்கள், உண்மையைத் தேடுவதில் கட்டுப்பாடு விதிக்கக் கூடாது."

துடைப்பமா?

"பழமையில் நாட்டம் கொள்வோர் சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்படும் மாறுதல்களை எதிர்ப்பது வரலாற்றுடன் போரிடுவதாகும். துடைப்பங்களைப் பயன்படுத்தி, நாம், கடல் அலைகளைப் பின்னே தள்ளிவிட முடியாது."

கூட்டுப் பணி

"ஆனால், பல்கலைக் கழகம் என்பது, செங்கல்லினால் ஆக்கப்பட்டதல்ல என்பதை மறந்துவிடக் கூடாது. நூல் நிலையங்களும், இரசாயன சாலைகளும் அவசியம்தான்; ஆனால், எல்லாவற்றையும்விட, பல்கலைக் கழகத் தொண்டு ஆசிரியர்களின் தன்மையைப் பொறுத்தது. மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து செயலாற்றுவதுதான் பல்கலைக் கழகம். அறிவை நாடுவதால் இவர்கள் அனைவரும் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்."

மனிதப் பண்பு

"பிறரைப் பார்க்கும் நாம், நம்மையே அவர்களிடை பார்த்துக் கொள்ள வேண்டும் அப்போதுதான் நாம் பிறருடன் வாழ முடியும். கல்வி கற்பது கெட்டுப் போவதற்காக அல்ல; இரக்கம் காட்டுவதற்காக. இரக்க உணர்ச்சியைத் தவிர்த்து, மேலும் மேலும் அறிவைப் பெருக்கிக்கொண்டே போனால், அறிவு தலைகீழாக மாறிவிடும். தத்துவம், மதச்சம்பந்தமான பாடம் உட்பட மனிதத் தன்மை பற்றிய பாடல்களைப் பயின்றால் இந்த இரக்க குணம் ஏற்படும்."

பயன்

"உலகத்துடன் ஒட்ட ஒழுகுவதற்கு உதவி செய்வதுதான பல்கலைக் கழகக் கல்வியின் முக்கியம்."

புள்ளி விவரம் பேசுகிறது!

லண்டன், அக். 26—

பிரிட்டனில் இவ்வாண்டில், முதல் எட்டு மாதங்களில், 3,63,384 மோட்டார் கார்கள் உற்பத்தியாகியிருக்கின்றன. சென்ற ஆண்டு இதே காலத்தில், 2,79,446 கார்கள் தான் உற்பத்தியாயின. இதே அளவில் உற்பத்தி போய்க் கொண்டிருந்தால், இவ்வாண்டில், மொத்தம் சுமார் 5,50,000 கார்கள் உற்பத்தியாகலாம். சென்ற ஆண்டு எண்ணிக்கை 4,48,000. இவ்வாண்டு முதல் எட்டு மாதங்களில் 7 கோடி பவுன் பெறுமான 2,07,003 கார்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

பிரகாசாவிற்கு எதிரே 'போலி பக்தர்' பாடல்!

திருவையாற்றில் தியாகய்யரின் உறவினர் பாடினர்

தஞ்சை, அக் 26—

சென்னை கவர்னர் பிரகாசா இன்று திருவையாற்றுக்கு வந்த போது சி. வி. இராசகோபாலாச்சாரி அவரை வரவேற்றார். அதன் பின் தியாகய்யரின் உறவினரான ராமுடு அய்யர் 'புவனி தாசுடனே' என்ற தியாகராச கிருதியைப் பாடிக் காட்டினார். அதைக் கேட்ட கவர்னர் மெய்மறந்து நின்றாராம். 'பக்திமான்களைப் போல் தோன்றுகிறவர்களில் பலர் போலிவேடதாரிகளென்று' அந்தக் கிருதி கூறும் விளக்கத்தைக் கேட்ட கவர்னர் 'எல்லாக் கவிஞர்களின் அக்கமும் இது தானே' என்றாராம்.

சட்டசபைத் தலைவருக்கு எதிராக தேர்தலில் போட்டி கூடாது

குவாலியர் மாநாட்டின் முடிவு

குவாலியர், அக். 25—

தேர்தலில் ஒரு சபாநாயகர் நின்றால் அவருக்கு எதிராக போட்டி போடக் கூடாதென்றும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரே மீண்டும் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையை ஏற்படுத்துவதென சபாநாயகர்கள் மாநாடு இன்று முடிவு செய்தது.

மாநாட்டிற்கு மக்கள் சபைத் தலைவர் ஜி. மாவ்லங்கர் தலைமை வகித்தார்.

துணை சபாநாயகர்கள் சட்டசபை விவாதங்களில் கலந்து கொள்ளலாம்; ஆனால் தகராறுக்கிடமான பிரச்சினைகளில் தலையிடக் கூடாதென மாநாடு தெரிவித்தது.

மேலும், மாநிலக் கணக்குகளை மேற்பார்வையிட அதற்கென ஒரு கமிட்டியை ஏற்படுத்த மாநாடு சிபாரிசு செய்தது.

பிரதேசப் படை தினம்

சென்னை, அக். 28—

அக்டோபர் 29-ந் தேதி இந்தியா முழுவதும் "பிரதேசப் படை தினம்" கொண்டாடப்படுவதை யொட்டி, சென்னையிலும், எல்லாப் பிரதேசப் படை பிரிவுகளும் அத்தினத்தைக் கொண்டாடும்.

சென்னை சர்க்கார் மந்திரி டாக்டர் யு. கிருஷ்ணாராவ். அன்று மாலை 4 மணிக்கு, ராஜாஜி சிங்ஜி மைதானத்தில் நடக்கும் ஒரு பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார். அந்த மைதானத்தில், பிரதேசப் படையின் பல்வேறு விதமான ஆயுதங்கள் காட்சிக்கு வைக்கப்படும்; அக்காட்சியை அன்று காலை 8-மணியிலிருந்து இரவு 8 மணி வரையில் பொதுமக்கள் பார்வையிடலாம்.

மூர்மார்க்கெட் சில்லறை வியாபாரிகள் சங்கம்

சென்னை, அக். 28—

29-10-53ல், பீபிள்ஸ் பார்க் அசோக் விஹார் பொதுஜன ஆண்டு விழாவிற்குத் தலைமை வகிக்க வரும் ஆச்சாரியாரிடம் மூர்மார்க்கெட் சில்லறை வியாபாரிகள் சார்பாக ஒரு மனு சமர்ப்பிக்கப்படும் என ஆரிய சங்காரன் அறிவிக்கிறார்.

ஜூலை தி. மு. கழக தோழர்கள் வழக்கு

சென்னை, அக். 28—

ஜூலையில், அக். 4-ந் தேதியன்று காங்கிரஸ் தோழர்களை, தி. மு. கழகத்தவர் தாக்கியதாக போலீசாரால் கைது செய்யப்பட்டு, விசாரணையில் இருந்துவந்த வழக்கு. நேற்று எழும்பூர் மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. போலீஸ் தரப்பிலுள்ள சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டு, கழகத் தோழர்களின் வாக்குமூலமும் பதிவு செய்து கொள்ளப்பட்டது தொடர்ந்து இன்றும் மேற்படி வழக்கு நடைபெறும். கழகத் தோழர்களின் சார்பில், வழக்கறிஞர் சி. பார்த்தசாரதி நாயகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய கோர்ட் நடவடிக்கைகளை சென்னை மாவட்ட தி. மு. கழக செயலாளர் உடனிருந்து கவனித்து வந்தார்.

மீற முடியாத மாமியார் கட்டளை

சிக்கந்தராபாத், அக் 26—

எல்லா காங்கிரஸ் காரர்களும் மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல், மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டுமென்று, ஐதராபாத் பிரதேச காங்கிரஸ் தலைவர் இராமானந்த தீர்த்தா இன்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

மேலிடத்து கட்டளைக்குக் கட்டுப்பட்டேதானாக வேண்டும் என்றும், பார்லிமெண்டரி போர்டு முடிவுபற்றி தனது சொந்த முறையில் ஒன்றும்கூற முடியாதென்றும் அவர் கூறினார்.

கேரளக் கவிஞர் பிறந்த தின விழா

புதுடில்லி, அக். 26—

கேரள அரசாங்கக் கவிஞர் வள்ளத்தோல் நாராயண மேனனின் 76-வது பிறந்த தினம் நேற்று இங்கு அகில இந்திய சமாதானக்குழு சார்பாக கொண்டாடப்பட்டது.

சி. ஆ.-வைப் பாராட்டிய ஆஸ்திரேலிய வெள்ளையர், கயானா பிரிட்டிஷ் பேயாட்டத்தைப் பாராட்டுகிறார்

ஆஸ்திரேலிய அதிகாரவர்க்க வழி வந்தவரிடம் வேறு எதை எதிர்பார்ப்பது?

கொழும்பு, அக் 26—

"பிரிட்டிஷ் கயானாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைதான் சரியானது; இல்லாது போனால், பொதுவுடைமை அங்கு முழு அளவுக்குப் பரவி பேராபத்தாய் முடிந்துவிட்டிருக்கும்",

என்று, ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் கேசி இன்று இங்கு கூறினார்.

இங்கு நடைபெற்ற நிருபர் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

"பிரிட்டிஷ் கயானாவில் பொதுவுடைமைத் தன்மை, அரசாங்கத்திலேயே மேவ ஆரம்பித்துவிட்டது. சரியான தருணத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் செயலில் இறங்கியது, எல்லா வகைக்கும் நல்லதாகிவிட்டதென்றே கருதுகிறேன்.

கயானா விடயம் பிரமாதமான தல்ல பொதுவுடைமைச் சீனாவை ஐ. நா.—வில் சேர்ப்பது பற்றிய கேள்வி உலகின் ஒவ்வொரு மூலையிலும் எதிரொலிக்கிறது. ஆனால், இந்தக் கேள்வியின் பதில் பொதுவுடைமைச் சீனாவின் நற்செயலுக்குள் இருந்து தான் வெளிவர வேண்டும்

தான் ஒரு சமாதான நாடு தான் என்பதைச் சரியான ஒரு நடைமுறையின் மூலம் செஞ்சீனா நிரூபித்துவிட்டால், பிறகு ஐ. நா.-வில் உள்ள உரிமையை எவரும் மறுக்க முடியாது. ஆனால், இந்தோ—சீனாவையும், மலேயாவையும் பார்க்கிறபோது, செஞ்சீனாவை நம்ப முடியவில்லை.

இந்தோ—சீனா போரையும் மலேயா கலகத்தையும், பீகிங் தான் தலைமை வகித்து நடத்துகிறது என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

கொரியா போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இந்தியா பங்கு கொள்வதை, சிங்மன் ரீ, எதற்காக எதிர்க்கிறாரோ தெரியவில்லை. ஒரு வேளை, இந்தியாவைப் பற்றி தவறாகப் புரிந்து கொண்டு இம்மாதிரித் தகராறு செய்கிறாரோ என்று எண்ணுகிறேன். ஆனால் டாக்டர் ரீயை, அமெரிக்கா பின்னாலிருந்து கொண்டு தூண்டவில்லை என்பது மட்டும் உறுதி. டாக்டர் ரீ எப்படி எண்ணினாலும், இந்தியா, கொரிய சமாதானத்திற்காக அதிகம் பாடுபட்டிருக்கிறது என்பது மறுக்க முடியாதது — மறுக்கக் கூடாதது" என்றார்.

திருச்சி, அக். 27—

சென்னை சர்க்காரின் முன்னாள் அமைச்சர் டி. எஸ். எஸ். ராஜன் இன்று பிற்பகல் 1-40 மணிக்கு இயற்கை எய்தினார். இவர் ஓராண்டு காலமாக நோய் வாய்ப்பட்டிருந்தார்.

லண்டன், அக். 27—

நான்கு வல்லரசு அதிபர்கள் சந்திப்பு பற்றி இன்று காமன்ஸ் சபையில் மீண்டும் கேள்வி எழுந்தது.

'ஐசன்ஹோவரை சந்திப்பது பற்றி எப்போதும் யோசித்து வருவதாகவும், அவர் பிரிட்டனுக்கு வர உடன்பட்டால் ஆர்வத்துடன் வரவேற்பதாகவும் சர்ச்சில் கூறினார்.

தமிழ் இலக்கி......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிய மொழிகளுக்கு ஓரே ஒரு பிரிவு மட்டுந்தான் உள்ளது. இந்தியாவில் ஓரே மொழி அல்லது அதிகமானால் இரண்டு மூன்று மொழிகள் தான் உள்ளன என, ஐரோப்பியர்கள் எண்ணுகின்றனர். ஆனால் உங்கட்குத் தெரியும், பதினொன்கு அல்லது நூற்றுக்கணக்கான மொழிகள் இந்தியாவில் உள்ளன என்பது.

நான், பாரிஸில் இந்தி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் கற்றுத் தருகிறேன். ஆனால் எனக்கு தமிழ் மட்டும்தான் கற்றுத் தர வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது. ஏனெனில், ஆரம்ப நூற்றாண்டுகளில் அளவிடற்கரிய சிறந்த தமிழ்ப் புலவர்கள் இருந்திருக்கின்றனர்.

தமிழ் நாட்டில், உலக முழுவதும் மதிக்கத் தக்க ஒன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சென்ற ஒரு நூற்றாண்டில் அகில உலக தரமுள்ள, உயர்ந்த புத்தகங்கள் எழுதிய யாரும் இல்லை. ஆனால், என் கருத்துப்படி, சங்ககால இலக்கியங்கள், அரிய உயர்ந்த உலக மதிப்பைப் பெறத்தக்கன என்பதுதான். இந்த சங்க இலக்கியம், இந்தியாவில் உள்ள அரியவையில் ஒன்று, நாட்டுடைய உயர்ந்த இலக்கியங்களோடும் வைக்கப்படக் கூடியவை. சில கவிஞர்கள் ஹோமர் என்பவரோடு ஒப்பிடக் கூடியவர். புறம், அகம், பத்துப் பாட்டு, கலித்தொகை முதலியன உலக மதிப்புடையன. இந்த இலக்கியங்கள் எல்லாம் உலகிற்கு இன்னும் நன்றாகத் தெரிந்திருந்தால் உலக மக்கள் அறிய வழி ஏற்பட்டிருந்தால், அவை எப்போதோ உரிய இடத்தைப் பெற்றிருக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தூத்துக்குடி வாரம்

தி. மு. கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

★

1. நவம்பர் முதல் வாரத்தில், (1-ந்தேதி முதல் 8-ந்தேதிக்குள்) ஒரு நாள், "தூத்துக்குடி நாள்" என்று ஒரு கூட்டம் அவசியம் நடத்த வேண்டும்.
2. அந்தக் கூட்டத்தில், தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. நிறைவேற்றிய தீர்மானத்தை, 'கனம் இராசகோபாலாச்சாரியார், முதல் மந்திரி, அரசாங்க மாளிகை. செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—9," என்ற முகவரிக்கு உடனடியாகத் தபாலில் அனுப்பி, நகலை, தலைமை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.
4. அன்றைய கூட்டத்திலேயே, தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, தோழர்களை விடுதலை செய்யும்படி சென்னைப் பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்று தயாரித்து, அதில், நூற்றுக்கணக்கானவர் கையெழுத்துக்களை வாங்கி, தனியாகப் பிரதம மந்திரி 'முகவரிக்கு' அனுப்பி, கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையை தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகக் கிளையும் கட்டாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

'அறிவகம்,'
சென்னை,
23—10—53.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொருளாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆசிரியருக்குக் கடிதம்

அந்த 'அவள்!'

☆

ஆசிரியர், 'நம் நாடு',
சென்னை.

ஐயா,

மாற்றாராக இருந்தாலும் மரியாதை கொடுத்துப் பேசுவதும், எழுதுவதும் தமிழர் பண்பாடு. அதுவும், பெண்களைப் பற்றிய செய்திகளை எழுதும்போது, ஒரு போதும் மரியாதைக் குறைவாகத் தமிழர்கள் எழுதமாட்டார்கள். ஆனால், 'தினத் தந்தி' தினஇதழ், அதற்கு முற்றிலும் மாறாக, பெண்ணியத்திற்கு — தாய்க் குலத்திற்கு மதிப்புக் கொடுக்க மறுக்கிறது.

மந்திரி "ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பதவி ஏற்றதிலிருந்து அவரைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் போதெல்லாம், 'அவள்' என்றே குறிப்பிட்டு வருகிறது. மேலும், 'சுந்திரவாணி முழுக் கர்ப்பிணியாக இருந்தாள்'. 'குப்பம்மா சொன்னாள்'; 'மீனாம்பாள் சிவராஜ் கூறினாள்' — என்று தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறது.

'தினமணி'யோ, 'சுதேசமித்திரனோ' இவ்வாறு எழுதியிருந்தால், நாம் வருத்தப்பட்டிருக்கப் போவதில்லை.

ஏனெனில், அவர்கள், பெற்ற தாயையும், உடன் பிறந்த சகோதரிகளையும் 'வாடி, போடி' என்று அழைக்கக்கூடியவர்கள். அவர்களது கலாசாரம் அப்படி. ஆனால், "உலகம் முன்னேற வேண்டும்; சமத்துவம் மலர வேண்டும்," என்று கூறிக்கொள்கின்ற 'தினத் தந்தி' கூறுவதுதான் நமக்கு வருத்தத்தைத் தருகிறது.

இலக்கணத்திலே, 'உயர்திணை' என்ற அவ்வகையில் ஒரு பிரிவு உண்டு. அதில், ஆண்டவனைக் கூட 'அவன்' எனலாம் என்று விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பெண்களுக்கு அப்படி அல்ல; அவர்கள் சமுதாயத்தின் கண்கள்; அவர்களை அவமரியாதையாக எழுதுவது தவறு—கண்டிக்கத்தக்கது.

எனவே, இனிமேலாவது, 'தினத் தந்தி' இதழ், பெண்களைப்பற்றி எழுதும்போது கவுரவம் கொடுத்து எழுதுமென எதிர்பார்க்கிறோம்.

அன்பன்,
டி. சம்பந்தம்,
மண்ணடி, சென்னை-1.

நேருவுக்கு தி. மு. கழகம் கருப்புக்கொடி காட்டியதேன்?

சென்னை, அக். 28—

பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், அக். 23-ந் தேதி, சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் பேசும்போது, "சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு மீண்டும் தேர்தல் நடத்தவேண்டும் என்று உறுப்பினர்கள் கோரியபோது, கூடாதென்று பண்டித நேரு கடிதம் அனுப்பியது ஜனநாயகத்திற்கு முரணானது; நேருவின் இந்தப் போக்கைக் கண்டிக்கத்தான் தமிழ்நாட்டிற்கு அவர் வந்தபோது எல்லா இடங்களிலும் கருப்புக் கொடி காட்டப்பட்டது," என்று கூறினார்.

தி. மு. கழகம் கருப்புக்கொடி காட்டியது, அதற்காக அல்ல என்பதை உணர்த்தவும், உண்மை நிலையை விளக்கவும், சென்னை, மதுரை, கோவை மாவட்டக் கழகங்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை கீழே தந்துள்ளோம்:—

சென்னை:

24—9—53 மாலை சென்னை மாவட்ட நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடியது. அதுபோது, கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

"அக்டோபர் முதல் வாரத்தில் நேரு பண்டிதர் சென்னை வரும்போது, அவர் நமது போராட்டங்களை 'நான்சென்ஸ்' என்று கூறியதைக் கண்டிக்க, அவருக்கு அமைதியாக இருந்து கருப்புக் கொடி காட்டுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

—'நம் நாடு': 2—10—53.

☆

மதுரை:

16—9—53ல், கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற மதுரை மாவட்ட கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

"அக்டோபர் 3-ந் தேதி நேரு மதுரை வரும்போது, தென்னாட்டவர் போராட்டங்களை அவர் 'முட்டாள் தனம்' என்று கூறியதைக் கண்டிக்கும் வகையில், அவருக்குக் கட்டுப்பாட்டுடன் கருப்புக் கொடி காட்டுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது"

—'நம் நாடு' 29—9—53.

☆

கோவை:

20—9—53ல், நடைபெற்ற மாவட்டக் கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

"பண்டித நேருவின் தமிழ்நாடு சுற்றுப் பிரயாணத்தின்போது, அவர் கோவை வருகையில், 'நமது போராட்டங்கள்' சிறுபிள்ளைத்தனம்; முட்டாள் தனம் என்று கூறியதைக் கண்டிக்க அமைதியாக இருந்து அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

—'நம் நாடு' 24—9—53

சேலத்தில் ஆச்சாரியாருக்கு கருப்புக் கொடி

சேலம், அக். 26—

25—10—53 ஞாயிற்றுக் கிழமை, இங்கு நடந்த காங்கிரஸ் அரசியல் மாநாட்டுக்கு ஆச்சாரியார் வந்தபோது, காலை 11-30 மணிக்கு, தி. மு. கழகத் தோழர்கள் 2000 பேர்கள் வரையில் கூடி, சேலம் பெரிய ஆற்றுப் பாலம் முதல், இம்பீரியல் பாங்கு வரையில் பாதை ஓரத்தில் நின்று கருப்புக் கொடிகள் காண்பித்து, "புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்குக; தலைவர்களை விடுதலை செய்; தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கு" என்று எழுதிய அட்டைகளைக் கையிலேந்திக் கொண்டு, மேற்படி முழக்கங்களுடன் அமைதியான முறையில் அதிருப்தியைத் தெரிவித்தனர்.

கருப்புக் கொடி நிகழ்ச்சி முனிசிபல் கவுன்சிலர் தோழர் பி. கே. வரதராஜுலு தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முனிசிபல் கவுன்சிலர்களான டாக்டர் கே. ஆர். கோபால், எ. மாரியப்பன், நாகப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். அமைதியும், கட்டுப்பாடும் கொண்ட முறையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இடமாற்றம்

நெல்லை—பேட்டை தி. மு. கழகம், முன்பு இருந்த இடத்திலிருந்து, பேட்டை—சேர்மாதேவி ரோடு, 174 எண் இல்லத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

சந்தாதாரர்கள் கவனத்திற்கு!

தயவு செய்து, காரியாலயத்துடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்பவர்கள், கடிதம் எழுதும்போதெல்லாம், தவறாமல், தங்களது சந்தா எண்ணை, அதில் குறித்தனுப்ப வேண்டுகிறோம். குறிப்பாக, பழைய சந்தாதாரர்களும், தற்போதைய சந்தாதாரர்களும் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்போது மேற்குறித்த விஷயத்தைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்
"நம் நாடு."

வருந்துகிறோம்

சென்னை, அக். 28—

சென்னை, இராயபுரம் 2-வது வட்ட தி. மு. கழக நிர்வாகியும், சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினருமான தோழர் வ. ஜெயசந்திரன் அவர்களுடைய 2-வயதுப் பெண் குழந்தை கண்மணிதேவி அகால மரணமடைந்ததைக் குறித்து வருந்துவதோடு, துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மேற்படியார் குடும்பத்தாருக்கு கழகத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். [நமது ஆழ்ந்த அனுதாபத்தையும், நண்பருக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.]—(ஆ-ர்.)

அனுதாபங்கள்

சென்னை, அக். 26—

தண்டையார்பேட்டை 1-வது வட்ட தி. மு. கழகக் கிளைக் கழகத்தின் உறுப்பினர் தோழர் ஆர். எஸ். தம்பியின் தங்கை 23—10—53 இரவு இயற்கை எய்திய செய்தி கேட்டு அந்த வட்டத் தோழர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

• • •

திருச்சி, அக். 26—

அம்பில் தி. மு. கழகச் செயலாளர் தோழர் த. பிச்சையா அவர்கள் தந்தையார் 21-10-53 தேதி இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு மிகமிக வருந்துகிறோம். தந்தையின் பிரிவால் வாடும் தோழர் பிச்சையாவுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் என திருச்சி மாவட்ட செயலாளர் அம்பில் தருமலிங்கம் தெரிவிக்கிறார்.

இறுதி மரியாதை

பொள்ளாச்சி, அக். 26—

தோழர் கிருஷ்ணசாமி மறைந்தது குறித்து, 23—10—53ல், பொள்ளாச்சி ராஜா தியேட்டரில் இறுதி மரியாதைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் இராமலிங்கம் தலைமை வகித்தார். தோழர்கள் கே. ரமணி, பி. டி. சென்னப்பக் கவுண்டர், பி. நடராசன், அ. ச. பாலு, கிருஷ்ணசாமி, மணி ஆகியோர் பேசினர்.

நாற்று நடும் இயந்திரம்

கொழும்பு, அக் 28—

இலங்கையில் கூடிய சீக்கிரம் இயந்திரம் மூலம் நெல் நாற்றுகள் நடப்படும். தென் கிழக்கு ஆசியாவிலேயே இலங்கைதான் முதன் முதலாக இம்முறையைப் பின்பற்றுகிறது.

இந்த இயந்திரங்கள், இத்தாலியிலிருந்து வரவழைக்கப்படும். ரூ. 7,000 விலையுள்ள ஒரு இயந்திரம், 70 ஆட்கள் செய்யக் கூடிய வேலையைச் செய்யும். 8-மணி நேரத்தில் 10 ஏகர் நிலத்தில் நாற்று நட்டுவிடுமாம்.

வழி காட்டுகிறார்?

பெர்லின், அக். 28—

"பதினொரு ஆசியா தேசங்களும், மத்திய கிழக்கு நாடுகளும் சேர்ந்த ஒரு மூன்றாவது கோஷ்டி ஏற்படவேண்டும்; கெய்ரோவிலிருந்து, டோக்கியோ வரையில் நீடிக்கும் இம்மூன்றாவது கோஷ்டிதான் சர்வதேச கம்யூனிசத்திற்குத் தக்க பதில் அளிக்கும்; இன்னும் 25 ஆண்டுகளுக்கு நிலைமை [illegible] பாதுகாத்து, உலகில் அமைதி நிலவ உதவும்" என்று பிரஜா—சோ. மெம்பர் மகாதேவ் சிங் கூறியுள்ளார்.

மார்ஷல் டிட்டோ பர்மா வருவார்!

ரங்கூன், அக் 28—

மார்ஷல் டிட்டோ, பர்மாவுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று, தான் விரும்புவதாக பர்மிய பிரதமர் தாகின்-நு ஒரு கூட்டத்தில் தன் கருத்தை வெளியிட்டதாக யூகோவின் நிருபர் ஒருவர் எழுதியுள்ளார்.

யூகோவுக்குச் செல்லும் பர்மிய தூதுக்குழுவின் மூலம் மார்ஷல் டிட்டோவுக்கு உத்தியோகபூர்வமான அழைப்பு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிகிறது.

தன்னாட்சி வேண்டுமென காஷ்மீர் இளைஞர்கள் குரல்

பாகிஸ்தான் — இந்தியா சகோதர நாடுகள்

ஸ்ரீநகர், அக். 25—

தேசிய மாநாட்டின் வாலிபர்கள் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானமொன்றில், "இந்திய—பாகிஸ்தான் மக்களிடையே நட்பும், அமைதியும் நிலவவேண்டும் என ஜம்மு காஷ்மீர் மக்கள் விரும்புகிறார்கள். இந்த இரண்டு சகோதர நாடுகளும் அமைதியாக வாழவேண்டும் தங்களுக்குள்ள பிரச்னைகளுக்கு அமைதி வழி நின்று, முடிவு காணவேண்டும்," என்றும், "இந்த இரண்டு நாடுகளுக்கு மிடையில் உள்ள பிளவைப் பெரிதாக்க முயறுகிற சில சுயநல ஏகாதிபத்திய சக்திகளின் தலையீடுதான் இந்தோ—பாக் நல்லுணர்வுக்கு தடையாயுள்ளன," என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஏகாதிபத்திய சக்திகளை முறியடிக்க, பாகிஸ்தானின் சமாதானப் பிரியர்கள் தங்களியக்கத்தைத் தொடர்ந்து நடத்துவார்களென மாநாடு மேலும் நம்பிக்கை தெரிவித்தது.

காஷ்மீரின் உள்நாட்டு சுதந்திரத்தைப் பறித்து, இந்தியாவோடு இணைக்கச் செய்கிற எல்லாவித முயற்சிகளையும் தகர்க்க உறுதியான முடிவு கொண்டுள்ளதாக அத்தீர்மானம் கூறுகிறது.

காஷ்மீரின் புதிய அரசாங்கம் அறிவித்துள்ள முற்போக்கு சீர்திருத்தங்களை மாநாடு வரவேற்பதோடு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், வியாபாரத்தைப் புதுப்பிக்கவும், கோரியது அம்மாநாடு.

மறைமலை அடிகள், திரு. வி. க. நினைவு விழா

மாயூரம், அக். 20—

மாயூரம் கூறைநாட்டில், முத்தமிழ் மன்றத்தின் சார்பில் 18—10—53ல், மறைமலை அடிகளார், திரு. வி. க. நினைவு விழா, வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் தலைமையில் நிகழ்ந்தது. மறைமலை அடிகள், திரு. வி. க. மாண்பினை இணைத்துக் காட்டித் தலைவர் அவர்கள் பேசினார்கள்.

தமிழ்ப் பெரியார் தொண்டினைக் குறித்து, வித்துவான் சா. குருசாமி, நெல்லை. மா. சிவசம்பு, மாயூரம். கே. என். ஒ அரைராசன் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

இரவு 8 மணிக்கு தமிழிசைக் கலைஞர்களுக்கு பட்டமளிப்பு நடைபெற்றது. முடிவில் சென்னை சவுக்கார்பேட்டைக்கு, 'திரு. வி. க. நகர்' என பெயர் சூட்ட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெட்ரோல் தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடிக்கிறது

லண்டன், அக். 28—

லண்டன் நகர் பெட்ரோல் தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடித்து வருகிறது. இராணுவத்தினர், பெட்ரோல் லாரிகளை ஓட்டி, பஸ்களுக்கு பெட்ரோல் கிடைக்கும்படி செய்து வருகின்றனர். லண்டன் நகரிலும், அங்கிருந்து வெளியூர் செல்லும் பஸ்களும் குறைந்த அளவிலேயே விடப்படுகின்றன.

சிறார் பெறும் கல்வி ஆசிரியர்கள் தரத்தை பொறுத்திருக்கிறது

ஆசிரியர் நிலையை உயர்த்த சர்க்கார் செய்வது?

மங்களூர், அக் 25—

இங்கு கார்கல் என்ற இடத்தில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் கூட்டமொன்றில் பேசிய நிதி மந்திரி சுப்ரமணியம், கல்வி, அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அரசியல் வேறுபாடுகளை கல்வித் துறையில் புகுத்துவது தேச முன்னேற்றத்திற்கே கேடானதாகும் என்றார்.

குழந்தைகட்குத் தரப்படுகிற கல்வியில் தான் நாட்டின் முன்னேற்றம் சார்ந்திருக்கிறது என்பதை மத்திய மாநில அரசாங்கங்கள் நன்கு உணர்ந்திருக்கின்றன. தேச முன்னேற்றத்திற்கு கல்விதான், அடிப்படை—முதுகெலும்பு எனவேதான் ஐந்தாண்டுத் திட்டம், நல்ல குறையற்ற கல்வி முறைகளை மாநில அரசுகள் கையாளவேண்டுமென உணர்த்துகிறது.

"குழந்தைகட்குத் தரப்படும் கல்வியின் தரம், கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களின் தரத்தைப் பொறுத்தது."

"தகுதியும், பயிற்சியும் திறமையும் பெற்ற, உற்சாகத்தோடு, உழைக்கும் ஆசிரியர்கள் இல்லாவிடில், எந்தக் கல்வித் திட்டமும் வெற்றிபெறாது."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: [illegible]